உ

சிவமயம்.

ஸ்ரீகுருபரப்ரம்ஹணேநம:

மெய்ஞ்ஞானோதயமென்னும்

அமுதானந்தர் பாடல்.

இவை

விழுப்புரம் தாலூகா சங்கீதமங்கலம்
தேவாங்க குலதிலக வீரபத்ர புத்ர ரத்னமாகிய
முனிசாமியோகி யென வழங்கும்
அமுதானந்தரால் இயற்றியது.

இவற்றுள்

மெய்ஞ்ஞானக் குறவஞ்சி, மெய்ஞ்ஞானத்
தங்கம், யோகானந்தக்களிப்பு, பாப்பாட்டி,
பாலம்மா, பொன்னம்மா, கண்ணம்மா,
முதலாகிய அதியற்புதமமைந்த
ஞானப்பாடல்கள் அடங்கியுள்ளன.

இஃது
இந்நூலாசிரியரின் சகோதரராகிய
வே. வீ. ரங்கசாமி செட்டியாரவர்களால்
விழுப்புரம்
ஸ்ரீருக்மணி விலாஸ் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1930.

OFFICE OF THE REGISTRAR OF ...
No. ____
1 MAR 1930

O-,1MAT,M
N30.
180486

உ

சிவமயம்.

ஸ்ரீகுரு பரப்ரம்ஹணே நம:

அமுதானந்தர் பாடல்.

விநாயகர் வணக்கம்.

திருவரு ளுருவா யோங்குந் திங்களுங் கதிரோனாகி
அருமறைப் பொருளா யுள்ளத் தணுவினுள்ள ணுவாய்த் தோன்றும்
பெருங்குரு நிலையிதென்று பேதமற்றோது ஞானக்
கரிமுகன் குமரன் செம்பொற் கழலிணை சென்னி சேர்ப்பாம்.

அகத்தீசர் வணக்கம்.

அடிநடு முடிவிதென்றோ தரும்பெரும் பொருளா யோங்குங்
கொடுமுடிமிசை யெஞ்ஞான்றுங் குற்றமற்றி லகானந்த
நடமிடு முண்மைஞான நதிபதி யுதித்த ஜோதி
வடிவுடை யகத்தீசன் பொன்மலரடி வணக்கஞ் செய்வாம்.

மெய்ஞ்ஞானக் குறவஞ்சி.

முன்னோனைக் கண்டுமுதற் றுதிசெய்வதேன் சிங்கி-என்றும்
அன்னோனிடத்தி லனைத்து மிருப்பதாற் சிங்கா
எல்லாப்பொருளு மிருக்குந் தலமேது சிங்கி-அது
நல்லோர்புகழு நடுநிலைக்குள்ளடா சிங்கா
நல்லோர்புகழு நடுநிலை யென்னடி சிங்கி-யாரும்
சொல்லரு மாணிக்கஜோதி மலையடா சிங்கா
மாணிக்கஜோதி மலைமேலிருப்பதார் சிங்கி-நல்ல
ஆணிப்பொன்னம்பலத்தாடுந் தலைவனாஞ் சிங்கா
ஆடுந்தலைவனரு ளெங்கடிக்கிட்டுஞ் சிங்கி-என்றும்
கூடுந்திருப்பதிகோயிற் பக்கத்தடா சிங்கா

கோயிற்பக்கத்திற் குலாவுவதாரடி சிங்கி ஓதும்
வாயிற்பெறுமருள் மங்கையவளடா சிங்கா
மங்கை யுருவ மகிமையைச்சொல்லடி சிங்கி-அது
கங்கையையன் சிரங்கண்ணிருப்பதடா சிங்கா
ஐயன் சிரத்துள தாரறிவாரடி சிங்கி-அது
மெய்யுளே மெய்யெனும் விந்தையறிந்தவர் சிங்கா
விந்தையறியும் விதமெனக்கோதடி சிங்கி-பெரும்
நந்திக்கொலுவாம் நடுவணைச் சென்றடா சிங்கா
நடுவணையோங் கருணையகமாரடி சிங்கி-பெருங்
கொடுமுடி மேற்றிகழ் கோமளவல்லியாஞ் சிங்கா
கோமளவல்லியைக் கூடுவோனாரடி சிங்கி-ஒளிர்
ஏமச்சபையுளா டெம்பிரானமடா சிங்கா
எம்பிரான்றன்னை யெவரறிவோரடி சிங்கி-அருள்
அம்பிகைப்பாலுண் டகமகிழ்வோரடா சிங்கா
அம்பிகைப்பாலென் றறைவதெதுவடி சிங்கி-அன்பர்
நம்புமெய்த்தாரக நாதமதாமடா சிங்கா
நாதவிந்தென்று நவிலுவதென்னடி சிங்கி-மேலோர்
ஓதுந்தலையுங் காலுள்ளிருப்பதடா சிங்கா
காலுந்தலை யொன்றாய் காணுவதெங்கடி சிங்கி-திரு
மாலுந்திவந்தவன் மாளிகையுள்ளடா சிங்கா
உள்ளே யிருப்பதுணர்வ தெவ்வாறடி சிங்கி-ஞானக்
கள்ளைக்குடிப்பவர் காணுவதாமடா சிங்கா
கள்ளைக்குடிக்குங் கருத்தெவர்க்குண்டடி சிங்கி-பெரும்
பிள்ளைத்தலையுண்ணும் பேருக்குண்டாமடா சிங்கா
பிள்ளைத்தலையுண்ணும் பித்தனெவனடி சிங்கி-உயர்
வெள்ளிமலையினுள் வீற்றிருப்போனடா சிங்கா
வெள்ளிமலையென்று மேவுந்தலமெது சிங்கி-யாரும்
விள்ளருமோன வெளிநடுவாமடா சிங்கா
மோனவெளியாமுத்தற் பொருளென்னடி சிங்கி-ஞானத்
தேனருணானந்தத் தெள்ளமுதாமடா சிங்கா
தெள்ளமுதுண்ணுந் திறமெவர்க்குண்டடி சிங்கி-என்றும்
உள்ளழுக்கற்றில குத்தமர்க்காமடா சிங்கா

324
181·48

உத்தமர்கொள்ளு முறையெது சொல்லடி சிங்கி-கூடும்
பத்துமொத்தாகிய பாலமுதாமடா சிங்கா
பாலமுதென்றுப் பகருவதென்னடி சிங்கி-என்றும்
மேலுங்கீழாகி விளங்கும் பொருளடா சிங்கா
மேலுங்கீழாகி விளங்குந்தலமெது சிங்கி-அது
நாலுபேர்கூடு நவமணி மேடையாஞ் சிங்கா
மேடைமேலென்றும் விளங்குவோனாரடி சிங்கி-முத்தி
வீடுபெறத்தரும் வித்தகனுமடா சிங்கா
வித்தகனோடொன்றாய் மேவுநிலையெதாஞ் சிங்கி-ஒளிர்
சத்துசித்தானந்தந் தன்னையறிவதாஞ் சிங்கா
தன்னைத்தான் காணுந்தலமெது சொல்லடி சிங்கி-பேசும்
அன்னையுமப்பனு மாடிக்கூடுந்தலஞ் சிங்கா
ஆடிக்கூடுந்தல மாரறிவாரடி சிங்கி-பெருங்
கோடியகிலாண்டக்கூட்டங் கண்டோரடா சிங்கா
கண்டோரிவரென்றுக் காணுவதெப்படி சிங்கி-மேலாம்
அண்டர் கண்டேத்தருளாதி முனிவராஞ் சிங்கா
ஆதிநடுவந் தமற்றப் பொருளேது சிங்கி-அருட்
ஜோதிவடிவாய் துலங்கும் பெருவெளி சிங்கா
ஜோதிக்கல்லுப்பென்றுச் சொல்லுவதென்னடி சிங்கி-அது
பாதிவிளைந்தப்பளிங்குக் கல்லுப்படா சிங்கா
உப்புக்கைப்பூறனீக் குண்மைமையைச்சொல்லடி சிங்கி-அது
அப்பாலாமற்றொன்று லாவதில்லையடா சிங்கா
இல்லையில்லையெனு மின்பப்பொருளேது சிங்கி-வெள்ளைக்
கல்லையுண்டாக்கிய காரமுஞ்சாரமாஞ் சிங்கா
காரமுஞ்சாரமுங் காணுவதென்றடி சிங்கி-அது
சூரியன் சந்திரன்றோன்றிய பின்னடா சிங்கா
சூரியன் சந்திரன் றோன்றுவதென்றடி சிங்கி-உள்ளே
தேருஞானசாரச் செய்கை யுணர்ந்தபின் சிங்கா
ஞானசாரத்துறை நானறியச் சொல்வாய் சிங்கி-அது
வானைகு மண்ணைகு மாசையொழிப்பதுட் சிங்கா
வானும் புவிபா மகிமையைச்சொல்லடி சிங்கி-அது
மோனநிலைத்தரு மூன்றெழுத்தாலடா சிங்கா

மூன்றெழுத்தோன்று முடிவெழுத்தேதடி — சிங்கி அது
ஆன்றோர் நடுவினின்றாடு மெழுத்தடா — சிங்கா
கேட்டமொழியெலாங் கேவலமாமோடி — சிங்கி- ஆனால்
ஆட்டமற்றே மன தாவலறுமோடா — சிங்கா.

பாம்பாட்டி.

ஆடுபாம்பே விளையாடுபாம்பே-நல்ல
அந்தரங்கோயிலுட் கூத்தாடுபாம்பே
நாடித்தேடி யோடிமனம் வாடிடாதுள்ளே-குரு
நாதன் பதங்கண்டோ மென்றாடுபாம்பே (ஆடு)

ஆகாய கெங்கையுள்ளே நித்தங்குளிப்போம்
அற்பருக்காசார நிலைக்காட்டாதொளிப்போம்
தேகால யத்தினடு சென்று களிப்போம்-என்றுஞ்
செப்பு மொழித்தப்பல்ல வென்றாடுபாம்பே (ஆடு)

கோயிற்கதவை யென்றுந் திறந்துவைப்போம்-சற்றுங்
குற்றமுள்ள மாந்தருள்ளே செல்லவு மொப்போம்
வாயிற்படியிலென்றுங் குடியிருப்போம்-எங்கள்
மயின் றெழிலிது வென்றாடுபாம்பே (ஆடு)

அண்டம் பிண்டம் பிண்டமண்டமாக நோக்குவோம்
அம்புலியைச் சுட்டெறித்தருக் கணுக்குவோம்
உண்டதையே மாறிமாறி யூழற் போக்குவோம்
உண்மையுள்ள வித்தையி தென்றாடுபாம்பே (ஆடு)

நாதவிந்தை யின்னதென்றுத் தெரியவல்லார்
நரகமிது சொற்கமிதென் றறியவல்லார்
பேதமுற்றலைந்து மதிகெட்டபேர்க்கு-நல்ல
பெரியோர்கள் சொல்லாரென்றாடுபாம்பே (ஆடு)

எத்தைத்தின் றெங்கிருப்பதென் றேக்கம்பிடித்தோர்
எள்ளளவு முண்மை நிலையென்று மறியார்
அத்தைத்தின் றங்கிருக்கு மனுபவமுற்றாலரு
ளானந்த மதுவா மென்றாடுபாம்பே. (ஆடு)

ஊதியே மூலக்கனலே மூட்டிப்பதமாய்-நல்ல
உழக்க முதழக்கு நெய்யொன்று சேர்த்து
பாதிவேக வைத்தெடுத்து நாங்கள் புசிப்போம்-என்றும்
பற்றற்றோர்க்குற்றதி தென்றாடுபாம்பே (ஆடு)

காயா மரத்திலுண்டாங் கள்ளைக்குடிப்போம்-நல்லக்
கருவாடும் பெருந்தலைக் கறியுண்ணுவோம்
தாயாரிடத்திலே சுகித்திருப்போம்-எங்கள்
சமரசக்கொள்கையி தென்றாடுபாம்பே (ஆடு)

வித்தையிலதீ தவித்தை யெங்கள் வித்தையாம்
மெய்யறியாப் பொய்யரென்றும் செய்யா வித்தையாம்
முத்தருஞ் சித்தருங்கொள்ளு மோனவித்தையாம்
முதல்வித்தை யிதுவே யென்றாடுபாம்பே (ஆடு)

பன்றிக்குப் பொதிச்சோறு சுமக்குங்கழுதை-என்றும்
பார்ப்பவர் பிரமிக்க வீண்கழிப்பான் பொழுதை
ஒன்றுக்கு முதவானவனுற்றபழுதை-குரு
உபதேசமென்பா னென்றாடுபாம்பே (ஆடு)

ஆதிவேதநாதஜோதி பாதம்பிடிப்போம்
அப்பதத்துடனுந் தலைசேர்த்து முடிப்போம்
பாதிவீதி நீதிமூன்றும் பாடம்படிப்போம்-உண்மை
பார்த்தவர்க்கு நேர்த்தியா மென்றாடுபாம்பே (ஆடு)

எட்டிரண்டுங் கட்டிநடுப் பெட்டியில் வைப்போம்
எல்லையல்லை யென்றவரிடத்தினுஞ் செப்போம்
குட்டித்தொட்டுச்சுட்டு மெட்டு மட்டென்றிசைப்போம்-எங்கள்
குலபலநலமி தென்றாடுபாம்பே. (ஆடு)

மெய்ஞ்ஞானக்கண்ணி.

பற்றற்றுளோங்கும் பரமனைக் கண்டோர்க்குக்
கற்றுதலேதுக்கடி பொன்னம்மா கற்றுதலேதுக்கடி

வானகத்துள்ள மதியமுதுண்போர்க்குப்
போனகமேதுக்கடி பொன்னம்மா போனகமேதுக்கடி

வள்ளலிருக்குமலை யேறிச்சென்றோர்க்குத்
துள்ளலிங்கேதுக்கடி பொன்னம்மா துள்ளலிங்கேதுக்கடி

வஞ்சகமற்றுண் மதியொளி கண்டோர்க்குச்
சஞ்சலமேதுக்கடி பொன்னம்மா சஞ்சலமேதுக்கடி

ஏமப்பாலுண்டகத் தீசனைக்கண்டோர்க்குக்
காமப்பாலேதுக்கடி பொன்னம்மா காமப்பாலேதுக்கடி

ஓங்காரத்துள்ளே யொளிதனைக் கண்டோர்க்கு
ஆங்காரமேதுக்கடி பொன்னம்மா ஆங்காரமேதுக்கடி

விண்ணாசைக்கொண்டு வெளிச்சென்ற ஞானிக்குப்
பெண்ணாசையேதுக்கடி பொன்னம்மா பெண்ணாசையேதுக்கடி

மெய்க்குள்ளே தோன்றும் விமலனைக்கண்டோர்க்குப்
பொய்க்குறும்பேதுக்கடி பொன்னம்மா பொய்க்குறும்பேதுக்கடி

ஆட்டமடங்கி யறைக்குள்ளே சென்றபின்
கூட்டங்களேதுக்கடி பொன்னம்மா கூட்டங்களேதுக்கடி

போட்டவிடத்திற் பொருள்தேடிக் கண்டோர்க்கு
வாட்டங்களேதுக்கடி பொன்னம்மா வாட்டங்களேதுக்கடி.

விருத்தம்.

ஆதியா முதலெழுத்ததன் பினக்கரங்கடைப்
பாதியிலிரண்டு மொன்றை பதியவைத்தனுதினம்
நீதியான முற்றிருக்கினி கரிலாத வாலைபுஞ்
ஜோதியாகி தோன்றுமுள்ளே சூதுபேதமில்லையே.

அஞ்செழுத்தில் மூன்றெழுத்தருமையா மெழுத்ததிற்
பிஞ்செழுத்திரண்டுமாம் பெரியதோ ரெழுத்துமாம்
பஞ்சமில்லை மூன்றுமோர் பழமதாங் கண்டிண்டிடிற்
சஞ்சலமற்றேகமாய்த் தனித்திருக்கலாகுமே.

எட்டிரண்டு மொன்று கூட்டியேகமாக வெண்ணிலீர்
விட்டுவிட்டு யெண்ணியெண்ணி வீணதாயேனலைகுறீர்
கட்டநட்ட மெண்ணிடார் கணக்கிலுக்க முற்றவர்
வட்டமிட்டொளிர்வதுள்ளேவாய் கணக்கிதல்லவே.

மெய்யும்பொய்யு மெய்புளே விளங்குமன்றிவேறிலை
பொய்யையெங்கு மெய்யைவிட்டுபோ யொழித்தார் புவியுளோர்
மெய்யும் பொய்யுமையனுள் விளங்குமட்டுஞ் சென்றிடிற்
பொய்யுமின்றி மெய்யுமின்றி பொருளுமின்றி போகுமே.

மேட்டியான பாற்கடலின்மீது பள்ளிகொள்ளு மால்
வீட்டினுக்கடுத்த வீட்டில் மேவுமெய்ப்பொருளருட்
பூட்டரும் பிரமஞான பொக்கிஷ மனைத்துமிந்
நாட்டினிலி ருப்போரெந்தநாளுங் காண்பதில்லையே.

மலையின்மீது வாசமு மதிமயக்கு மாதர்கள்
முலையின்மீது நேசமு முதிர்ந்த சாமியார்களே
அலையு நெஞ்சகத்து ளோங்குமையன் பாதமேத்தியே
நிலையடைவதென்றோ காண நீங்கள் சொல்லுவீர்களே.

அண்டங்கண்ட பேரெலா மமுதமுண்டானந்தமாய்
அண்டநிலை நின்றெவர்க்குமரிய தேவராயினார்
அண்டங்குண்டா யுண்டுமே லென்றறிவிலா தேனலைகுறீர்
அண்டமும் பிரமாண்டமு மகத்தினுட் கண்டறிவதே.

அப்புமுப்புமொன்று சேர்ந்ததிலிருந்துதித்திடு
முப்புகைப்பகற்றிடு முளவறிந்த பேர்களே
தப்பிலாத மெய்ப்பொருட்டனை யறிந்தபேதமா
யொப்பிலாத ஜோதியோடு மொன்றி வாழ்குவார்களே.

அழக்கிலே கிழக்கு மேற்களவி தென்றறிந்தபின்
னுழக்கிலே கிழக்கு மேற்கு முள்றுளே யறியலாம்
அழக்குழக்கு மாயுழக் கழக்கதாக மாறியே
கிழக்கு மேற்கு மின்றி யென்றுங் கீழுமேலாய் தோன்றுமே.

கருங்கலொன்றைநட்டுவைத்து கடவுளென்று போற்றுவோர்
அருங்கலாம் பளிங்கு போலகத்துளே பிரமாண்டமாம்
பெருங்கலுண்ட தீசனென்று பேதமில்லா தேத்திடின்
வருங்கலாலின் கீழமர்ந்த வாதமற்ற போதமே.

பெண்ணுமாணுமொன்று கூடிபெற்றெடுத்த செல்வமே
விண்ணுமாகி மண்ணுமாகி மேலுமாகி யன்பர்கள்
நண்ணுமோன ஞானவின்ப நாதனுகி நிற்பதாங்
கண்ணுளூற் றறிந்தபேர்க்கு காணுமுண்மை காணுமே.

வேதம்வேதமென்று பேசும் வெட்கமற்ற மாந்தர்காள்
வேதமுற்றுணர்ந்தபேர்க்கு மேலுங்கீழுமுள்ளதோ
வேதமாதி ஜோதிபாதம் மெய்க்குளே விளங்குமுட்
பேதமற்றிலகு மேலோர் பெற்றபேறதாகுமே.

விந்துநாத மின்னதென்று வீணர் கண்டுரைப்பதோ
சந்திரனு தயமுற்ற தானமானவானிடை
அந்தமாதி சந்தியென்றறிவதற் கரியதாய்
சிந்தையுள்ள மும்பொருந்துஞ் சித்திமுத்தியாமிதே.

மாதங்காத வீதமாக வழிநடக்கும் மாறுபோ
லேதிலாதவேத நீதியேன் பிதற்றிமாய்குறீர்
நாதமோது மாதிஜோதி ஞானமென்றுணர்ந்திடிற்
சூதுவாது கோதில்சொரூப முத்திசித்தியே.

கல்லை தெய்வமென்றதாய் வீண்காலமேன் கழிக்குறீர்
இல்லையென்றகத்த வீசனெண்ணி யேன்பழிக்குறீர்
தொல்லைவிட்டதில்லை யும்மை சொல்லை நம்பவில்லை நீர்
எல்லையற்ற ஞானிகளெடுத்துரைத்த சொல்லிதே.

அம்மையோடு மப்பனுடு மந்தரங்கதளியுளே
செம்மையாக பார்த்தகச் செயலடங்கி நிற்பவர்
எம்மையிலுயர்ந்த பாவமெண்ணிலாத தாயினும்
இம்மையேகருணையின்ப மெய்துவார் பொயில்லையே

அழுகண்ணிப் பாடல்.

எட்டரைக் கால்மண்டபத்து ளெவ்வுலகுங் காணாமல்
எட்டரைக் காலாகியிலகுமணி மேடையின்மேல்
எட்டரைக்காற் சீமாணா யென்றுங் குடியிருக்கும்
கட்டழகனோடு என்கண்ணம்மா நான் கலந்து விளையாடேனோ

அருந்து மதிப்பாற் பொங்கு மாற்றோரமாய் விளங்கும்
பெருந்துறையுள் வீற்றிருக்கும் பெம்மான்பொற் சேவடியைப்
பொருந்தி குருமுறையை போதமுற்ற பின்பல்லோ
வருந்தாதுள மகிழ்ந்து என்கண்ணம்மா வாழ்ந்திருக்கலானேண்டி

விண்ணாரும் மண்ணாரும் வேதியனுமாலறியாத்
தண்ணார் சிவகெங்கைத் தாவியதிலே குளித்து
அண்ணாமலையானடி முடியுஞ்ஜோதியுருப்
பண்ணாமலையேறி என்கண்ணம்மா பார்த்தாசைத்தீரேனோ

காத்தாளுமீசன் கருணைப் பொலியுமிடம்
கூத்தாடிக் கூத்தாடிக் கூற்றையுதைக்குமிடம்
ஆத்தாளைப் பிள்ளையணைந்து சுகிக்குமிடம்
பார்த்தாசைத் தீராமல் என்கண்ணம்மா பாகா யுருகுறண்டி

தாயாகித் தந்தையுமாய் சற்குருவா யெல்லோர்க்கும்
மாயா மருந்தளிக்கும் மாசற்ற தெய்வமுமாய்
காயாயுரி யுட்கலந்தாடு மாமணியை
வாயார வாழ்த்தாமல் என்கண்ணம்மா மதிகெட்டிருந்தேண்டி

சாற்றுமிரண்டாறெட்டு தத்துவங்களத்தனைக்கும்
வேற்றுருவமா யகத்துண்மேவு மொருவித்தகன்றாட்
போற்றிசெய்து மாமாயைப்போக்கும் மருளில்லாமற்
காற்றுருவமா யலைந்து என்கண்ணம்மா காலங்கழித்தேண்டி

விண்ணாட்டிலுள்ளோர்க்கு மேலான கற்பகத்தை
மண்ணாட்டிலுள்ளோர் மதித்தறியா மாமணியை
கண்ணாடிபோலு மருட்காட்சிதரு மெய்யுருவை
யுண்ணாடிப்பாராமல் என்கண்ணம்மா உளுத்தமரமானேண்டி

பேசரிதாம் வாசிப்பெரும்புரவி மீதேறி
நாசிமுனையென்னு நடுவணையினுட் சென்று
காசி கெங்கையுட்குளித்து காயக்கசடகற்றி
மாசில்லாமன்றுள் என்கண்ணம்மா மகிழ்ந்து விளையாடேனோ

குற்றமெலாம் நீக்கரிய கொள்ளிடத்திலே குளித்து
பற்றற்ற மெய்யடியார் பற்றருண் மெய்க்கோயிலெனுஞ்
சிற்றம்பலத்து ணடஞ்செய்யு நடராஜனடிப்
பெற்றென்று நீங்காத என்கண்ணம்மா பேரின்பங்காணேனோ

இன்பநிலை யெல்லோர்க்கு மின்னதெனக் காட்டுமகத்
தென்பழநி மாமலைமேற் றேசிகனுய் வாழ்குமரன்
றன்பதத்தைச் சந்ததமுஞ் சார்ந்துதுதி செய்வோர்க்கு
துன்பமென்பதெல்லாம் என் கண்ணம்மா தூளாய் பறக்காதோ

சாமிமலை வாழ்தகப்பன் சாமிகுரு தாட்பாணியார்க்
கோமொழியி னுண்மையகத்துள் விளக்கமாவதுண்டோ
ஓமொழியினுண்மை யகத்துள் விளக்கமானவர்க்கு
பூமிப்பொருளனைத்தும் என்கண்ணம்மா புல்லளவாய்தோன்றா
[தோ.

பாலம்மா.

சாதிசமயமெலாம் பாலம்மா சஞ்சலமாக்குமடி
ஆதிசமயமொன்றே பாலம்மா அல்லலை நீக்குமடி
குமரி தீர்த்தமடி பாலம்மா கோயிலங்குள்ளதடி
அமரரும் புகழும் பாலம்மா ஐயனிருப்பதடி
கண்ணாடிபோலெவர்க்கும் பாலம்மா காட்சிதரும் பொருளை
உண்ணடி பார்த்தவர்கள் பாலம்மா ஊமைகளாவரடி
ஆனைக்குடியிருக்கும் பாலம்மா அத்திவனத்திலுண்டாம்
தேனைக்குடிப்பவர்கள் பாலம்மா தேவர்களாவரடி
ஆதிதெய்வமடி பாலம்மா அகத்துணிற்பதடி

ஜோதித்தெய்வமடி பாலம்மா சொல்லுவதல்லவடி
உளத்தைச்சடலமடி பாவம்மா ஒன்பதுவாயிலடி
சூத்திரங்கண்டவர்க்கு பாலம்மா சுவர்க்கலோகமடி
ஐவர் தெரிசனமும் பாலம்மா அகத்துட்பாராமல்
தெய்வந்தெய்வமென்று பாலம்மா திரிவதேதுக்கடி
மாயப்புரவியடி பாலம்மா வானிடஞ்செல்வதடி
பாயுநாற்காற் பிடித்தால் பாலம்மா பதியுணிற்குமடி
அங்கக்கோ லடி பாலம்மா அற்புதமானதடி
தங்கக்கோயிலடி பாலம்மா சாமியிருப்பதடி
அப்பனும் பிள்ளையடி பாலம்மா ஆத்தாளொருத்தியடி
எப்போதுங் கூடியல்லோ பாலம்மா இன்பந்தருவரடி
பேய்க்கரும்புள்ளவிடம் பாலம்மா பேதமறத்தெரிந்தோர்
வாய்க்குணவாகுமட்டும் பாலம்மா மாந்து மகிழ்வாரடி
பத்துமொத்துத் துதிக்கும் பாலம்மா பதியைச்சார்ந்தவர்கள்
இத்தரையோர் மொழியை பாலம்மா எள்ளுமுட் கொள்ளாரடி
ஆகாய கெங்கையிலே பாலம்மா அன்பாய் குளித்தவர்கள்
தேகாலயந்தனில் வாழ் பாலம்மா தேவனைக் காண்பரடி
கண்ணுட்ட மில்லார்க்கு பாலம்மர காரிருட்காண்பதுபோல்
உண்ணுட்ட மில்லார்க்கு பாலம்மா உலகந்தோன்றுமடி
முச்சந்தி வீதியிலே பாலம்மா முன்னேனிருப்பதடி
அச்சந்தி யுச்சியிலே பாலம்மா ஆத்தாளிருப்பதடி
கோயிலுட் பூசைசெய்யும் பாலம்மா குருக்களுண்டானல்
சேயுமனைவியுடன் பாலம்மா தெய்வங்கூத்தாடுமடி
முன்னேனிடத்திலல்லோ பாலம்மா மூவரிருப்பதடி
அன்னேனைக்காணுமல் பாலம்மா அலைவதேதுக்கடி.

மெய்ஞ்ஞானதங்கம்.

மெய்ஞ்ஞானத்தங்கம் மேலானத்தங்கம்
பொய்ஞ்ஞானத் தங்கமெல்லாம் தங்கமே
பொருளற்ற தங்கமடி ஞானத்தங்கமே

வெள்ளிமலைக்குள்ளிருக்கும் வேதனுமாற்காணாத
வள்ளலடிப்போற்றுதவர் தங்கமே
வாழ்வனைத்துந்தாழ்வாமடி ஞானத்தங்கமே

அப்பனுந்தாயுள்ளிருப்பதாய்ந்துணர்ந்து பாராமல்
ஒப்புக்கு முண்டைகள்போல் தங்கமே
ஓலமிட்டழுவதேனோ ஞானதங்கமே

ஓசாரமாய் பேசியூரார் பொருட்பறிக்கும்
ஆசாரக்கள்ளருக்கு தங்கமே
ஐயனருள் கிட்டாதடி ஞானதங்கமே

எண்ணில்லாச்சாத்திரங்களைத்தனைநாள் பார்த்தாலு
மண்ணிற்றெறியாதடி தங்கமே
மதியாலுணர்வதடி ஞானதங்கமே

வெள்ளேட்டைப் பார்த்தறியும் வித்தையெலா மித்தையெனும்
உள்ளேட்டைப் பார்த்தவர்க்குத் தங்கமே
உண்மைநிலைத் தோன்றுமடி ஞானத்தங்கமே

மெய்ப்பொருளாயுள் விளங்கும் விந்தையென்றும் பாராமல்
பொய்ப்பொருளைக் கண்டல்லவோ தங்கமே
போது கழிக்கின்றாரடி ஞானதங்கமே

மெய்யைப் பொய்யென்றுரைக்கும் வீணருரை கேட்பவர்க்கு
ஐயமொன்றும் நீங்காதடி தங்கமே
அன்புமருளோங்காதடி ஞானதங்கமே .

சுட்டுஞ்சுடாதக்கற் சுக்காங்கல்லென்றறிந்தோர்
சுட்டுகெட்டக் கல்லேயெல்லாந் தங்கமே
ஜோதிக்கல்லென்பாரடி ஞானதங்கமே

உப்பிலுள்ளக்கசடு மூறலது நீக்காமல்
முப்பு முடியாதடி தங்கமே
முத்தியுங்கைக் கூடாதடி ஞானத்தங்கமே.

ஆனந்தக்களிப்பு.

சிவராஜ யோகமே யோகம் உண்மைத்
தெரிந்து சாதித்தோர்க்குத் தெளிவாஞ் சிவோஹம்
பவரோகங்களே யதிவேகம் நீக்கிப்
பஞ்சமகதிதரும்பார் மேலோர் போகம் (சிவ)

நாலேந்துவாயிலே மூடு மூடி
நடுவாயிலேத் திறந்தெந்நாளுங் கூத்தாடு
மேலையன்பாதத்தைத் தேடு அங்கு
விளங்குமானந்த வெளிதானுய் கூடு (சிவ)

வித்தில்லாத விளேவேது விந்தை
வெளிவிட்டவர்க்கருள் விளக்கமாகாது
சுத்தமாந் துரியவிண் மீது என்றுந்
தூங்காமற்றூங்கி சுகிப்பவன் சாது (சிவ)

கோலத்திருவருண் மேடை மேலே
கோதற்றிலகன்பர் குளித்திடுங்கோடை
காலத்தினும் வற்றுவோடை அதைக்
கண்டவர்க்கேது கனமானபீடை (சிவ)

அருளேத்தருவத காரம் மேலே
ஆனந்தத்தேனுயமர்ந்தது காரம்
இருளேத்துறத்தும காரம் உல
கெல்லாமுந்தானுயிலகு மோங்காரம் (சிவ)

குடிப்பது குண்டலிப்பாலே — மனங்
குவிந்திருப்பது மூன்றுங்கூடிடு மூலே
பிடிப்பது மாமதிக்காலே — இந்தப்
பேறடைந்தோர்க்குண்டோ வீணனவேலே (சிவ)

சத்திசிவ மொன்றாய் கூடி — பசுந்
தங்கசகத்திரக்கம்ப மேன்மாடி
மத்தியிலே விளையாடி — என்றும்
வாழ்ந்திருப்பார் கண்டு வணங்குள்ளேதேடி (சிவ)

காயமாங் காட்டினுள்ளுண்டு — நல்லக்
கருநெல்லி வெண்சாரை யென்னுமிரண்டு
தூயமாதவரதைக் கண்டு — என்றுந்
துணிவுடனருந்துவார் சுகத்தைமேற்கொண்டு (சிவ)

மாணிக்கமாமலே மேலே — என்றும்
மாங்காப்பாலோங்கும் மதியொளிப்போலே
நீணிலத்தைக் கொண்டுண்டாலே — யின்ப
நிலேகாணலாமென்பர் மேலோர் வரக்காலே (சிவ)

அந்தரங்கத்தினிலாடு — மா
ளம்பிகைப்பாத மனுதினந்தேடு
தொந்தமற்ற நிலேநாடு — அங்கு
துலங்கும்அருட் பெருஞ்ஜோதியைக்கூடு (சிவ)

காமாந்தகாரத்துட் சிக்கி — யற்பக்
காரிகையாரிதழ் நாய்போலுநக்கி
ஏமாந்தறிவின்றி சொக்கி — பல
னேதுகண்டா யெடுத்தி யம்புவாய்பக்கி (சிவ)

வாழி விருத்தம்.

வாழிவான் கதிர்மதிமண் வாழி யைங்கரன் குகன்
வாழி நான்முகன் றிருமால் வாழி சத்தியுஞ்சிவன்
வாழியாழி சூழுலகம் வாழி சர்வ ஜீவர்கள்
வாழி யகத்தீசர்பாதம் வாழி முற்றும் வாழியே.

முற்றிற்று.